2015 செப்டம்பர் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 349, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

349—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***33516—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, திருப்புறம்பியம் ஊராட்சியில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பகோணம் ஒன்றியம், திருப்புறம்பியம் ஊராட்சி, கொடைக்காரன்படுகையில் நெல் கொள்முதல் நிலையம் கட்ட தெரிவு செய்யப்பட்ட இடத்திற்கு அருகே குளம் வெட்டப்பட்டு பள்ளமாக உள்ளதால், அந்த இடத்தில் நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் கட்ட இயலாது என முடிவு செய்து, அதற்குப் பதிலாக, அதே திருப்புறம்பியம் ஊராட்சியில், கண்ணங்குடி தெருவில் நிலம் தேர்வு செய்யப்பட்டு, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடம் ரூபாய் 30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதியில், திருப்புறம்பியம் ஊராட்சியில், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டி, கொடைக்காரன்படுகையில் ஆர்.எஸ்.*

எண் 17, நத்தம் புறம்போக்கில் காலியாக உள்ள இரண்டரை ஏக்கரில் கட்டுவதற்கு, திருப்புறம்பியம் ஊராட்சி, கிராம சபைக் கூட்டத்தில் 1–5–2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாத அகலமான பாதை உள்ள இடத்தில் கட்டுவதற்கு அனுமதி வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்குப் பரிந்துரை செய்திருந்தோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. க. அன்பழகன்: *ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் அல்லாமல் வேறு இடம் தேர்வு செய்யப்பட்டு, அரசின் மூலமாக ரூ.30 இலட்சம் செலவு செய்து கட்டடம் கட்டுவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருப்புறம்பியம், ஏரகரம், வாலபுரம், பொன்பேத்தி, கொந்தகை, குடிதாங்கி, இன்னம்பூர் மற்றும் தேவனாஞ்சேரி ஆகிய பகுதிகளின் பொதுமக்கள் சார்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடப்பாண்டிலே கட்டடம் கட்டும் பணியை உடனே தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளின் பாதுகாவலராக விளங்குகிற ஒரே தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கும், விவசாயிகள் கொண்டுவரும் நெல்லைத் தூற்றி, காய வைப்பதற்கும், நெல் உலர்க்களங்கள் கட்டுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து ஆணை பிறப்பித்து வருகிறார்கள். அந்த வகையிலேதான், 311 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்*

சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்போது, 260 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களை ரூ.80.75 கோடி மதிப்பீட்டிலும், 235 நெல் உலர்க்களங்களை ரூ.77.05 கோடி மதிப்பீட்டிலும் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் 1,822 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.100 கோடியே 28 இலட்சத்தை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியிலே மேலும் சில நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டப்பட வேண்டுமென கோரிக்கை வைத்தார்கள். திருப்புறம்பியம் அருகே அசூர், கல்லூர், சோழபுரம் ஆகிய கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் ஏற்கெனவே உள்ளது. தற்போது, உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள திருப்புறம்பியம் ஊராட்சி, கொத்தங்குடி, கடிச்சம்பாடி மற்றும் சோழன்மாளிகை ஆகிய இடங்களில் நிலம் தெரிவு செய்யப்பட்டு, தலா ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி மற்றும் தாலுகா, பம்பபடையூர் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு, நடவடிக்கையில் உள்ளதாகத் தெரிகிறது. அப்பணியை விரைவுபடுத்தி, கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். என் சொந்த ஊரான சாக்கோட்டையில் பல ஆண்டுக் காலமாக இயங்கி வந்த நேரடி நெல் கொள்முதல் நிலையம் மாற்றப்பட்டு, தற்போது பக்கத்தில் உள்ள கிருஷ்ணாபுரத்தில் நஞ்சை நிலத்தில் இயங்கி வருகிறது.

மலையப்பநல்லூர், மருதாநல்லூர், சாக்கோட்டை, கிருஷ்ணாபுரம், மாடாகுடி மற்றும் சிவபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், அதே கிருஷ்ணாபுரம் கிராமத்தில் காலியாக உள்ள நத்தம் புறம்போக்கில், ஆர்.எஸ். எண் 73–ல் சுமார் மூன்றரை ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். நானும் ஒரு விவசாயி என்ற முறையிலும், தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த மூன்று அமைச்சர்களும் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற அந்த உரிமையிலும், இன்னும் ஒரு படி மேலே வேண்டுமானாலும் சென்று வீட்டு வசதி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் டிராக்டர் ஓட்டிக்கொண்டு உழுது விவசாயம் செய்யக்கூடியவர்கள் என்ற அந்த உரிமையிலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். சோழன்மாளிகை D.P.C.–யிலே பெருமளவில் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்டடம் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, திப்பிராஜபுரம் D.P.C.–ல் போதிய இடம் உள்ளது. தேவனாஞ்சேரி D.P.C.–ல் மணல்மேடு பகுதியில் 200 குழி காலியாக இடம் உள்ளது. தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். மருதநல்லூர் போன்ற இடங்களிலும் காலியாக உள்ளது. எனவே, கிருஷ்ணாபுரம் சோழன்மாளிகை, திப்பிராஜபுரம், பம்பபடையூர், தேவனாஞ்சேரி மற்றும் மருதாநல்லூர் போன்ற இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடங்கள் கட்டித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வருவாய்க் கோட்டத்தில் மட்டும் தற்போது 24 கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவர் குறிப்பிட்ட சோழன்மாளிகையில் கட்டடம் கட்டுவதற்கு டெண்டர் விடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் வேலை தொடங்கப்படவிருக்கிறது. மேலும், சாக்கோட்டை அருகில் இருக்கிற கிருஷ்ணாபுரத்திலே

மீண்டும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் இயங்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

பம்பபடையூர் பகுதியிலே நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையம் எந்த இடத்தில் வேண்டுமோ, அந்த இடத்தில் இருக்கிற விவசாயிகள் 33 சென்ட் நிலத்தை, நுகர்வோர் வாணிபக் கழகத்திற்கு இனாம் சாசனம் செய்து கொடுத்தாலோ அல்லது அந்தப் பகுதிகளிலே இருக்கிறவர்கள் நியாயமான விலையில் 33 சென்ட் நிலத்தை அரசுக்கு அடையாளம் காட்டினால் அதனைக் கிரையம் வாங்கிக் கொண்டோ உடனடியாகக் கட்டப்படுகிறது. எங்கெல்லாம் விவசாயிகள் கோரிக்கை வைக்கிறார்களோ அங்கெல்லாம் தேவையின் அடிப்படையில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் கட்டிக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 350, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

350—

பேருந்து வசதி

***30094—திரு. பி.வி. கதிரவன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதியிலுள்ள எழுமலையிலிருந்து வத்தலகுண்டு, செம்பட்டி வழியாக திருப்பூருக்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?